# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# பத்தாம் பத்து

## ஐந்தாம் திருவாய்மொழி - கண்ணன் கழலிணை
## ஆழ்வார் எம்பெருமானிடத்து பக்தி உடையார் செய்ய வேண்டிய செயல்களை எல்லாம் சுருங்கச் சொல்லி, பரோபதேசத்தை நிறைவு படுத்தல்

** கண்ணன் கழல் இணை *
நண்ணும் மனம் உடையீர்! **
எண்ணும் திருநாமம் *
திண்ணம் நாரணமே 1

நாரணன் எம்மான் *
பார் அணங்கு ஆளன் **
வாரணம் தொலைத்த *
காரணன் தானே 2

தானே உலகு எல்லாம் *
தானே படைத்து இடந்து **
தானே உண்டு உமிழ்ந்து *
தானே ஆள்வானே 3

ஆள்வான் ஆழி நீர் *
கோள் வாய் அரவணையான் **
தாள் வாய் மலர் இட்டு *
நாள் வாய் நாடீரே 4

நாடீர் நாள் தோறும் *
வாடா மலர் கொண்டு **
பாடீர் அவன் நாமம் *
வீடே பெறலாமே 5

** மேயான் வேங்கடம் *
காயா மலர் வண்ணன் **
பேயார் முலை உண்ட *
வாயான் மாதவனே 6

மாதவன் என்றென்று *
ஓத வல்லீரேல் **
தீது ஒன்றும் அடையா *
ஏதம் சாராவே 7

சாரா ஏதங்கள் *
நீர் ஆர் முகில் வண்ணன் **
பேர் ஆர் ஓதுவார் *
ஆர் ஆர் அமரரே 8

அமரர்க்கு அரியானை *
தமர்கட்கு எளியானை **
அமரத் தொழுவார்கட்கு *
அமரா வினைகளே 9

வினை வல் இருள் என்னும் *
முனைகள் வெருவிப் போம் **
சுனை நன் மலர் இட்டு *
நினைமின் நெடியானேக 10

** நெடியான் அருள் சூடும் *
படியான் சடகோபன் **
நொடி ஆயிரத்து இப்பத்து *
அடியார்க்கு அருள் பேறே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**